பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் ஸ்ரீ நூல் வசதி

# உதயன்

விலை
ரூபா
6 00

பொதுசன நூலகம்
22 AUG 1996
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

சுடர்11 வள்ளுவர் ஆண்டு 2027 ஆவணி 06 வியாழக்கிழமை (22-08-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 186

# ஈழத்தமிழ் அகதிகளின் வருகையை தடுப்பதற்கு தமிழக அரசு திட்டம்!

## ஏற்றி வரும் மீனவர்களின் படகுகள் பறிமுதலாகும் என எச்சரிக்கை

சென்னை, ஒகஸ்ட் 22

**இலங்கைத் தமிழ் அகதிகள் தமிழ் நாட்டுக்கு வருவது அதிகரித்திருப்பதை அடுத்து —**

**அவர்களைத் தமிழகத்துக்குள் நுழைய விடாமல் தடுக்கும் திட்டத்தை தமிழக அரசு மும்முரமாகச் செயற்படுத்தத் தொடங்கியிருப்பதாக செய்தி ஏஜென்ஸிகள் தெரிவிக்கின்றன.**

தமிழகத்துக்கு அகதிகள் வருவதைக் கண்காணிக்கச் சிறப்புப் பொலீஸ் படைப் பிரிவுகளைத் தமிழகப் பொலீஸார் ஏற்படுத்தியுள்ளனர்.

பாக்குநீரிணை நெடுகிலும் இந்தியக் கரையோரக் காவல் படையும் தனது காவலை அதிகரித்திருக்கின்றது.

அகதிகள் என்ற போர்வையில் ஈழத் தமிழ் தீவிரவாதிகள் தமிழகத்துக்குள் நுழைவதை தடுப்பதற்காகவே இந்த ஏற்பாடுகள் என்று தமிழக அரசு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## போதிய மருந்து வகைகள் இன்றி இடம்பெயர்ந்தோர் பெரும் அவஸ்தை

### ஐந்து குழந்தைகள் பலி!

வவுனியா, ஒக. 22

கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து இடம் பெயர்ந்த மக்களை நோய்களில் இருந்து காப்பாற்றுவதற்குத் தேவையான மருந்து வகைகள் இன்னும் அங்கு அனுப்பப்படவில்லை.

தண்ணீர் கிடைக்காத காரணத்தாலும் அசுத்த நீரையே மக்கள் அருந்துவதாலும் இடம் பெயர்ந்தோர் மத்தியில் ஆபத்தான நோய்கள் பரவி வருவது தெரிந்ததே.

எனினும் நோய்களைக் கட்டுப்படுத்தி, மக்களைக் காப்பாற்றுவதற்குப் போதிய மருந்து வகைகள் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளில் இல்லை.

இதே வேளை பிந்திய தகவல்களின் படி செப்ரிசீமியா வியாதியால் இதுவரை ஐந்து குழந்தைகள் இறந்துள்ளன.

மல்லாவி, அக்கராயன் குளம், புதுக்குடியிருப்பு, நெடுங்கேணி போன்ற இடங்களில் இருக்கின்ற வைத்திய

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கொக்குவிலில் விசாரணையின் பின் 600 இளைஞர், யுவதிகள் விடுவிப்பு!

### ஒருவர் மட்டும் தடுத்துவைப்பு

கொக்குவில் கிழக்கில் நேற்று முன்தினம் அரச துருப்புகள் நடத்திய தேடுதல் வேட்டையின் போது 15 வயதுக்கும் 30வயதுக்கும் இடைப்பட்ட 350 ஆண்களும் 250 பெண்களும் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அவர்களில் ஒரேயொரு ஆணைத் தவிர மற்றையவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் நேற்று விடுத்த அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

படையினர் அங்கு மேற்கொண்ட தேடியழிக்கும் நடவடிக்கையின் போது தீவிரவாதிகளின் சிறிய குழு ஒன்று துப்பாக்கித் தாக்குதலை நடத்தியது என்றும் —

அதில் ஏழு வயதுக்குழந்தை உட்பட மூன்று பொதுமக்கள் காயமுற்றனர் என்றும் —

காயமுற்றோர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் —

கண்ணிவெடிகள், அருண்கைக்குண்டுகள் போன்றவற்றைப் படையினர் கண்டெடுத்தனர் என்றும் —

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

## அ.தி.மு.க. பிளவுண்டது!

சென்னை, ஒக. 22

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் நேற்று இரண்டாகப் பிளவுண்டது.

கட்சியின் பொதுச் செயலாளர் என்ற முறையில் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா கடந்த ஞாயிறன்று கட்சியின் பொதுக்குழுக் கூட்டத்தைக் கூட்டிய அதே சமயம் —

கட்சியிலிருந்து ஜெயலலிதாவினால் வெளியேற்றப்பட்ட முன்னாள் மூத்த அமைச்சர்கள் அதற்குப் போட்டியாக நேற்று சென்னையில் கட்சியின் பொதுக்குழுவைக் கூட்டி கட்சியிலிருந்து ஜெயலலிதாவை வெளியேற்றும் தீர்மானத்தை அங்கு நிறைவேற்றினர்.

முன்னாள் அமைச்சர்களான எஸ். டி. சோமசுந்தரம், கண்ணப்பன், அரங்கநாயகம், முத்துச்சாமி, குழந்தைவேலு, கே. கே. எஸ். எஸ். இராமச்சந்திரன் ஆகியோர் கொண்ட குழுவினரே இந்தப் போட்டிப் பொதுக்குழுவை நேற்றுக் கூட்டினர்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருநிலப்பரப்பில் தங்கியுள்ள

## யாழ். கிளிநொச்சி மக்களை வவுனியா வர அழைப்பு

### இலங்கை அரசு விடுக்கின்றது

கொழும்பு, ஒக. 22

வன்னிப் பெருநிலப் பரப்பில் உள்ள யாழ். மக்களையும் மற்றும் கிளிநொச்சி மக்களையும் தங்கள் சொந்த இடங்களுக்குத் திரும்புவதற்கு வசதியாக வவுனியாவுக்கு வரும்படி இலங்கை அரசு அழைப்பு விடுத்திருக்கின்றது.

இலங்கை வானொலி மூலம் இது தொடர்பான அழைப்பு நேற்று மாலையில் சில தடவைகள் அடுத்தடுத்து விடுக்கப்பட்டது.

''உங்களை உங்கள் சொந்த மண்ணுக்கே அனுப்பிவைத்து, அங்கு நீங்கள் பாதுகாப்பாக வாழ ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

''எனினும் உங்களை நேரடியாக யாழ். குடாநாட்டுக்குக் கூட்டிச்செல்ல முடியாத நிலை உள்ளது. கிளிநொச்சி - ஆனையிறவு வழியாக உங்களை அங்கு கூட்டிச்செல்ல எங்களுக்கு வழி கிடையாது.

''இதற்காக நாம் மாற்று

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பதவியாவில் தாக்குதல்

கொழும்பு, ஒக. 22

பதவியாவில் விடுதலைப் புலிகளால் பொலீஸ் காவலரண் ஒன்று தாக்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் சிறு ஆயுதங்கள், மோட்டார்கள் கொண்டு இத் தாக்குதலை நடத்தினர் என்றும் —

பொலீஸாரும், ஊர்காவற் படையினரும் அத்தாக்குதலை முறியடித்து விட்டனர் என்றும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம் தெரிவித்தது. (இ-3)

## உணவு லொறிகள் குறித்து செஞ்சிலுவைக்குழு பேச்சு

வவுனியாவில் இருந்து வன்னிக்கு உணவுப் பொருள்களை எடுத்துச் செல்வதில் இருந்து வரும் சீரின்மை குறித்து, செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு அதிகாரிகளுக்கும் வவுனியா இராணுவ அதிகாரிகளுக்கும் இடையில் பேச்சுக்கள் இடம்பெற்றன.

வன்னிக்கான உணவு விநியோகத்தில் கடந்த பல வாரங்களாக தடங்கல் நிலை இருந்த போதும் —

கடந்த 12 ஆம் திகதி செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் வழித்துணையுடன் மீண்டும் உணவு விநியோகம் ஆரம்பமாகியிருந்தது.

எனினும் தற்சமயம் இந்த விநியோகத்தில் சீரின்மை நிலவுவது குறித்தே வவுனியா இராணுவ அதிகாரிகளுடன் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரிகள் பேச்சு நடத்தி உள்ளனர். (இ-3)

## இலங்கைக்கு உதவ அமெ. நிபுணர் குழு

பயங்கரவாத நடவடிக்கைகளைத் தடுப்பதில் நிபுணத்துவம் பெற்ற ஏழு அமெரிக்கர்கள் இலங்கை வந்துள்ளனர்.

அமெரிக்காவின் இரகசிய உளவு ஆய்வு நிறுவனத்தின் இலங்கை தொடர்பான நிபுணர் ஸ்ரீபன் கிம்ரன், அமெரிக்க அரச திணைக்களத்தின் பயங்கரவாத எதிர்ப்பு பிரிவின் முக்கியஸ்தர் விக்கோல் மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கை தொடர்பான பல்வேறு பிரிவுகளில் அனுபவம் உள்ளவர்கள் இந்தக் குழுவில் அடங்கி உள்ளனர்.

இக்குழுவினர் கடந்த 20 ஆம் திகதி வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரைச் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தினர்

இக்குழு இன்று மாலை பாதுகாப்புப் பிரிவின் உயர் அதிகாரிகளைச் சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நாட்டினுள் பயங்கரவாத நடவடிக்கைகள் மற்றும் அவை ஏற்பட்டதற்கான காரணங்கள் என்பவற்றை முழுமையாக அறிந்த பின்னர் இந்த அதிகாரிகள் இலங்கை அதிகாரிகளுக்குத் தேவையான அறிவுரைகளைப் பெற்றுக் கொடுப்பார்கள் என்று வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு செய்திகள் தெரிவித்தன. (இ-3)

96\97 கல்வி ஆண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக்கு

# 180 புள்ளிகள் பெற்ற சகலரையும் விண்ணப்பிக்குமாறு ஆலோசனை

யாழ்ப்பாணம் ஓக. 22

கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் நடந்த ஜி. சீ. ஈ (உயர் தர) பரீட்சையில், 180 புள்ளிகளைப் பெற்ற சகலரும் 96/97 கல்வியாண்டுக்கான அனுமதிக்கு விண்ணப்பிக்குமாறு யாழ். பல்கலைக்கழகப் பதில்துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

1995 ஆம் ஆண்டு ஓகஸ்டில் நடந்த ஜி. சீ. ஈ (உயர் தர) பரீட்சைக்குத் தோற்றியவர்களிடம் இருந்து பல்கலைக்கழக அனுமதிக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு விண்ணப்பங்களை கோரியுள்ளதை அடுத்தே பதில் துணை வேந்தர் மேற்கண்டவாறு ஆலோசனை தெரிவித்துள்ளார்.

இக்கல்வியாண்டுக்கான வெட்டுப்புள்ளி விவரத்தைக் கருத்தில் கொள்ளாது 180 புள்ளிகள் பெற்ற சகலரும் விண்ணப்பிக்க வேண்டிய அவசியத்தை பதில் துணை வேந்தர் வலியுறுத்தியுள்ளார்.

வெட்டுப்புள்ளி விவரம் வெளியாகிய பின்னர் பல்கலைக்கழகத்துக்கு மாணவர்கள் சமுகமளிக்காது விடும் பட்சத்தில் ஏற்படும் வெற்றிடங்களை நிரப்ப வெட்டுப் புள்ளிகளில் மாற்றம் ஏற்படும் என்பதாலும்-

10 விசேட பாடங்களுக்கு மாணவர்கள் பின்னர் அனுமதிக்கப்படுவதாலும்-

பல்கலைக்கழகத்துக்கு கூடுதல் மாணவர்களை அனுமதிக்கும் சூழ்நிலைகள் ஏற்படுவதாலும்-

பல்கலைக்கழக அனுமதிக்கான ஆகக் குறைந்த புள்ளியான 180 ஐப் பெற்ற சகலரும் விண்ணப்பங்களை அனுப்புவது நல்லது என்றும் பதில் துணை வேந்தர் ஆலோசனை கூறியுள்ளார்.

பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பப் படிவங்களை கொழும்பில் இருந்து எடுத்து வர விரிவுரையாளர் ஒருவரை கொழும்புக்கு அனுப்பியுள்ளதாகவும்-

அவை வந்து சேர்ந்ததும் விநியோகிக்கப்படும் என்றும்-

அதற்கு முன்பாக சுயமாக விண்ணப்பங்களைப் பெறக் கூடியவர்கள் அவற்றைப் பெற்று விண்ணப்பங்களை அனுப்பலாம் என்றும்- அவர் தெரிவித்தார்.

விண்ணப்பங்கள் செப்ரெம்பர் 16 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக அனுமதியில் பின்தங்கிய மாவட்டமாக இவ்வாண்டு யாழ்ப்பாண மாவட்டமும் இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

(இ-3)

## சங்கீத, நடன பாடங்களுக்கு பல்கலைக்கழக அனுமதி

யாழ்ப்பாணம், ஓக. 22

சங்கீதம், நடனம் ஆகிய பாடங்களில் தோற்றியவர்களும், விசேட பாடங்களுக்கான பல்கலைக்கழக அனுமதித்திட்டத்தின் கீழ், யாழ் பல்கலைக்கழக கலைப் பீடத்துக்கு அனுமதி பெற்றுள்ளனர்.

சமஸ்கிருதம், இந்து நாகரிகம், கிறிஸ்தவ நாகரிகம், சரித்திரம், புவியியல் போன்ற பாடங்களில் தோற்றியவர்களே இதுவரை காலமும் விசேட பாடங்களுக்கான பல்கலைக்கழக அனுமதித் திட்டத்தின் கீழ் பல்கலைக்கழக அனுமதியைப்பெற்றுவந்தனர்

முதன் முறையாக சங்கீதம், நடனம் ஆகிய பாடங்களுக்கும் இந்த அனுமதி இம்முறை வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அனுமதி பெற்ற மாணவர்கள் காலதாமதமின்றித் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு யாழ். பல்கலைக்கழக பதில் துணை வேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை கேட்டுள்ளார். (இ 3)

தெரிவுக்குழுக் கூட்டத்தில்

## பிராந்திய சபைகளுக்கான நிதி குறித்து ஆராய்வு

கொழும்பு, ஓக - 22

அரசாங்கத்தின் உத்தேச தீர்வுத்திட்டத்தின்படி பிராந்திய சபைகளுக்கு நிதிகளை எவ்வாறு பரவலாக்கம் செய்வது?

இது குறித்து நேற்று முன்தினம் நடந்த நாடாளுமன்றத் தெரிவுக் குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்டதாக தமிழ் அரசியல் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

பிராந்திய சபைகளுக்கு உரிய நிதி பரவலாக்கம் எவ்வாறு இருக்க வேண்டும் என்பது பற்றி சட்டமா அதிபர் நாடாளுமன்ற தெரிவுக் குழுவுக்கு சட்டவரைவு ஒன்றையும் சமர்ப்பித்துள்ளார்.

பிராந்திய சபைகளுக்குரிய நிதி சம்பந்தமாக கடந்த மாதம் ஆராய்ந்த தெரிவுக் குழு சட்ட வரைவு ஒன்றை சமர்ப்பிக்குமாறு சட்டமா அதிபரிடம் பணித்திருந்தது.

இதற்கமையவே இந்த நிதி சட்டவரைவு தெரிவுக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பிராந்திய சபைகளுக்கான நிதி அதிகாரங்கள் பூரணமாக இருக்க வேண்டும் என தமிழ்க் கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன. (இ - 3)

## திருமலை - காங்கேசன் பயணிகள் கப்பல் சேவை

### மீண்டும் ஆரம்பிக்க முயற்சி

திருகோணமலைக்கும், காங்கேசன் துறைக்கும் இடையேயான பயணிகள் கப்பல் சேவையை மீண்டும் ஆரம்பிக்கும் வகையில் பாதுகாப்பு ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு வடமாகாண புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகாரசபைத் தலைவர் சோமபால குணதீர பாதுகாப்பு அமைச்சு செயலாளர் சந்திரானந்த டி. சில்வாவை கடித மூலம் கேட்டுள்ளார்.

கடந்த மாதம் 13 ஆம் திகதிக்குப் பின்னர் வடமாகாணத்துக்கான பயணிகள் கப்பல் சேவை நிறுத்தப்பட்டது.

பயணிகள் கப்பலுக்கு கடற்படையினர் வழித்துணை வழங்க வேண்டும் அல்லது செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு வழித்துணை வழங்க வேண்டும்.

அப்படி வழங்கப்படுமானால் மீண்டும் பயணிகள் கப்பல் சேவையை ஆரம்பிக்க தயாராக விருப்பதாக கப்பல் மாலுமிகள், உரிமையாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளதையடுத்து திரு. குணதீர இவ் வேண்டுகோளை விடுத்துள்ளார். (இ-3)

## நெதர்லாந்தின் உதவியுடன் வடிகால்கள் புனரமைப்பு

யாழ். மாவட்டத்தில் மழைகாலம் நெருங்குவதையடுத்து யாழ். குடாநாட்டில் உள்ள வடிகால்கள் திருத்தியமைக்கப்படவுள்ளன.

யாழ். மாவட்டத்தில் பழுதடைந்த நிலையில் உள்ள வடிகால்களை - வாய்க்கால்களை சுத்திகரித்து சூழல் மாசடைவதைத் தடுக்கும் இத்திட்டத்துக்கு உதவ நெதர்லாந்து அரசு முன்வந்துள்ளது.

இத்திட்டம் விரைவில் செயற்படுத்தப்பட விருப்பதாக யாழ். அரச அதிபர் தெரிவித்தார்.

இத்திட்டத்தைச் செயற்படுத்த டிராக்டர்களை நெதர்லாந்து அரசு வழங்கவிருக்கிறது. (இ-3)

## கிழக்கிலும் வவுனியாவிலும் லஞ்சம் குறித்து முறைப்பாடு

### விசாரிக்கக் குழு செல்கிறது

கிழக்கு மாகாணத்திலும், வவுனியாவிலும் லஞ்சக் கெடுபிடிகள் அதிகரித்திருப்பதாக லஞ்ச ஆணையாளர் திணைக்களத்துக்கு பரவலாக முறைப்பாடுகள் கிடைத்ததையடுத்து 10 அதிகாரிகளைக் கொண்ட குழு ஒன்றை லஞ்ச ஆணையாளர் நெலும் கமகே அங்கு அனுப்பியுள்ளார்.

கிழக்கில் உலர் உணவு நிவாரணம் வழங்கல்—

சோதனைச் சாவடிகளின் ஊடாக வாகனங்களில் பொருள்கள் கொண்டு செல்வதற்கு அனுமதி வழங்கல்—

மற்றும் வன்செயல், இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நஷ்ட ஈடு கொடுப்பனவு வழங்கல்—போன்ற நடவடிக்கைகளின் போது அரசாங்க உத்தியோகத்தர்களில் பல்வேறு மட்டத்தவர்கள் மத்தியிலும் லஞ்சம் தலை விரித்தாடுவதாக லஞ்ச ஆணையாளர் திணைக்களத்துக்கு பொது மக்களிடம் இருந்து முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

(இ-3)

## தீவக பாடசாலைகளுக்கு பகுதி நேர ஆங்கில ஆசிரியர்

### விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம் ஓக. 22

தீவுப்பகுதிப் பாடசாலைகளில் சேவையாற்ற பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களை நியமிக்க கல்வித் திணைக்களம் விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

அடுத்த மாதம் 2 ஆம் திகதியன்று 65 வயதுக்கு உட்பட்ட ஓய்வுபெற்ற ஆசிரியர்களாக அல்லது உத்தியோகத்தர்களாக அல்லது ஆங்கிலப் புலமையுடையவர்களாக இருக்கும், தீவுப்பகுதியில் தற்போது வசிப்பவர்கள் இந்தப் பதவிக்கு விண்ணப்பிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்களை அடுத்த மாதம் 2 ஆம் திகதிக்கு முன் வலயம் ஒன்று பணிப்பாளருக்கு அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது.

இதற்கான பரீட்சை அடுத்த மாதம் 15ஆம் திகதி நல்லூர் தெற்கு விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெறும் (இ-3)

## சிற்றூழியர் தர வெற்றிடங்கள் நிரப்பப்படும்

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நிலவும் சிற்றூழியர் தரத்திலான வெற்றிடங்கள் யாவும் இம்மாத முடிவுக்குள் நிரப்பப்படும் என்று மாகாண கல்விச் செயலாளர் திரு. சுந்தரம் டிவகலாலா தெரிவித்தார்.

கல்முனைக்கு விஜயம் செய்த அவர் அங்கு இத் தகவலைத் தெரிவித்தார்.

# இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியா மத்தியஸ்தம் வகிக்காது

### தொண்டமான் கூறுகிறார்

கொழும்பு, ஓக. 22

''இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்தியா இனி ஒரு போதும் மத்தியஸ்தத்துக்கு வராது. ராஜீவ் காந்தி கொலையுடன் அவர்கள் இலங்கை மீது வைத்திருந்த நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டு விட்டார்கள்.''

இப்படிக் கூறியுள்ளார் இ. தொ. கா. தலைவரும்,அமைச்சருமான எஸ். தொண்டமான்.

கொழும்பு தமிழ் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நிபந்தனையற்ற பேச்சுக்களை அரசும், புலிகளும் நடத்த வேண்டும். அரசாங்கம் இதற்குச் சம்மதித்தால் விடுதலைப் புலிகளும் சம்மதிக்கலாம்.

இதை விடுத்து, இதில் கௌரவப் பிரச்சினையைப் பார்க்கப் போனால் இந்நாட்டு மக்களையும், செல்வத்தையும் தொடர்ந்து இழப்பது தவிர்க்க முடியாது போய் விடும்.

ஒருவர் மீது மற்றவருக்கு நம்பிக்கை இல்லை என்ற நிலையில் மூன்றாம் நாடு ஒன்றின் மத்தியஸ்தத்தைப் பெற்றுக் கொள்ளலாம்,

இது உள்நாட்டுப் பிரச்சினை என்றும், நாம் தான் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் பலர் கூறுகின்றனர். அப்படியானால் இந்த உள்நாட்டுப் பிரச்சினையை எப்போது, எந்த வகையில் தீர்த்து வைக்கப்போகிறார்கள்?

போரில் அரசாங்கம் வெற்றி காணலாம் என்பது தவறான எண்ணமாகும். அது ஒரு போதும் நிறைவேறாது. புலிகளுடன் பேச்சு நடத்துவது மூலமே வெற்றி காணலாம். இல்லையேல் இந்த யுத்தம் நமது அடுத்த பத்துத்தலைமுறைக்கு மேலாகத் தொடர்ந்து கொண்டேயிருக்கும்.

யாழ்ப்பாணத்தைப் பிடித்ததும் புலிகளை முற்றாக அழித்து விட்டதாகக் கூறப்பட்டது; ஆனால் முல்லைத்தீவுச்சம்பவம், தெஹிவளைச் சம்பவம், பரந்தன் சம்பவம் எமக்கு உணர்த்துவது என்ன?

இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சியில் நான் பலமுறை தலையிட்டேன். ஆனால் நடைமுறையில் சாத்தியமாகக் கூடிய எனது ஆலோசனைகள் தட்டிக் கழிக்கப்பட்டன.

இப்போதும் இவர்கள் என்னை நாடினால் நிச்சயம் உதவக்காத்திருக்கிறேன் நான் பெயர் பெறவேண்டும். என்பதற்காக பறந்து திரியும் அரசியல் வாதி அல்லன்.

என்னால் மக்களுக்கு, நாட்டுக்கு நன்மை கிடைக்குமெனில் நிச்சயம் செய்வேன்.

இப்படி தொண்டமான் மேலும் தெரிவித்தார். (இ-3)

## மாஹோவில் ஓகஸ்ட் மாத வவுச்சர்கள்

யாழ்ப்பாண ஓய்வூதியர்களின் ஓகஸ்ட் மாத வவுச்சர்கள் ''மாஹோ'' கப்பலில் எடுத்துவரப்பட்டுள்ளன.

காங்கேசன் துறையில் தரித்து நிற்கும் இக்கப்பலில் இருந்து வவுச்சர்கள் இன்று அல்லது நாளை இறக்கி எடுத்துவரப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

அதேசமயம், மண்எண்ணெய், சீனி ஆகியவற்றுடன் வேறு சில பொருள்களும் இக்கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ளன.

ஏற்கனவே ரீயூனியன் என்ற கப்பலில் [illegible] துறை துறைமுகத்தில் பொருள்கள் இறக்கப்படுவது தெரிந்ததே. (இ-3-5)

## தமிழ் சாகித்திய விழா

வடக்கு - கிழக்கு மாகாண தமிழ் சாகித்திய விழா எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 27 ஆம், 28 ஆம், 29 ஆம் திகதிகளில் வவுனியாவில் நடைபெறவுள்ளது.

இம்மூன்று தினங்களிலும் காலை, மாலை நிகழ்ச்சிகளாக பல தமிழ் நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

ஆய்வரங்கு, புத்தகக் கண்காட்சி, மலர் வெளியீடு, கலை நிகழ்ச்சிகள் போன்ற பல்வேறு நிகழ்வுகளும் இத்தினங்களில் நடைபெறவுள்ளன.

வவுனியா நகரசபை மண்டபம், திறந்த வெளியரங்கு ஆகியவற்றில் இந்நிகழ்ச்சிகளைக் காலையிலும், மாலையிலுமாக நடத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டு வருவதாகத் தெரியவருகின்றது. (இ-152)

## காயம்

தென்மராட்சி, ஓக. 22

மான்களுக்கு தீனி போடுவதற்குச் சென்றவரை கலைமான் துரத்திக் கொம்பினால் குத்திக் காயப்படுத்திய சம்பவம் நேற்று முன்தினம் மாலை சாவகச்சேரி கச்சாய் வீதியில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த கந்தையா அமிர்தலிங்கம் (வயது 60) என்பவரே காயமடைந்த நிலையில்சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் ... நூலகம்

# குறொஸ்னி மீது பெரும் தாக்குதல்; ரஷ்யப்படை இன்று ஆரம்பிக்கலாம்

## சிவிலியன்கள் முழு அளவில் வெளியேற்றம்

குறொஸ்னி, ஒக. 22
செச்சின்ய பிரிவினைவாதக் கிளர்ச்சிக்காரர்களின் கட்டுப்பாட்டில் உள்ள செச்சின்யாவின் தலைநகர் குறொஸ்னி மீது ரஷ்யப் படைகள் பெரும் தாக்குதல் ஒன்றை நடத்துவதற்கான முஸ்தீபுகளில் ஈடுபட்டுள்ளன.

இந்தத் தாக்குதல் இன்று வியாழக்கிழமை ஆரம்பிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுவதாக பி.பி.ஸி. தெரிவித்தது.

இதற்கிடையில் தலைநகர் குறொஸ்னியில் இருந்து ஆயிரக்கணக்கான சிவிலியன்கள் வெளியேறி உள்ளனர்

குறொஸ்னி மீது தாம் பெரும் தாக்குதல் நடத்தப் போவதாகக் கூறி, ரஷ்யப் படைகள் சிவிலியன்களை வெளியேறுமாறு கேட்டிருந்தன.

ரஷ்யப்படைகளுக்கும் செச்சின்ய பிரிவினைவாதக் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையிலான யுத்த நிறுத்த முயற்சிகள் முறிவடைந்ததை அடுத்தே குறொஸ்னி மீது பெரும் தாக்குதல் ஒன்றை நடத்த ரஷ்யப்படைகள் முயற்சி செய்து வருகின்றன.

இதற்கு முன்னர் ரஷ்ய பாதுகாப்புச் சபைத் தலைவர் அலெக்சாண்டர் லியபேட் செச்சின்ய பிரிவினைவாதக் கிளர்ச்சியாளர்களுடன் பேச்சு நடத்தியிருந்தார்.

சமீபத்தில் தேர்தலில் வெற்றியீட்டிய ரஷ்ய ஜனாதிபதி பொரீஸ் யெல்ட்ஸின் இதற்கான முழு அதிகாரங்களையும் அலெக்சாண்டர் லியபேட்டுக்கு வழங்கி இருந்தார்.

செச்சின்யப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் ரஷ்ய பாதுகாப்பு அமைச்சருக்கும் பாதுகாப்புச் சபைத் தலைவருக்கும் இடையில் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டுள்ளன.

சமாதானப் பேச்சுக்கள் வெற்றி பெறாமற் போனதற்கும் —

ரஷ்யப் படைகள் குறொஸ்னி மீது பெரும் தாக்குதல் ஒன்றை நடத்த இருப்பதற்கும் —

ரஷ்ய பாதுகாப்பு அமைச்சரே காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

ரஷ்ய ஜனாதிபதி பொரீஸ் யெல்ட்ஸின் இரு வாரங்களுக்கு முன்னர் ரஷ்யாவின் புதிய ஜனாதிபதியாகப் பதவி ஏற்றிருந்தார்.

இவரின் பதவி ஏற்பு வைபவத்தையொட்டி செச்சின்ய பிரிவினைவாதக் கிளர்ச்சியாளர்கள் குறொஸ்னி மீது பெரும் தாக்குதலை ஆரம்பித்து பெரும்பாலும் குறொஸ்னியின் முழுப் பகுதியையுமே தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்திருந்தனர்.

செச்சின்யப் பிரச்சினையில் ரஷ்ய அரசாங்கம் மேற்கொண்டுள்ள அணுகுமுறை அரசாங்கத்துக்குள் பிளவு ஏற்பட வழி வகுக்கலாம் என்று அவதானிகள் தெரிவிக்கின்றனர். (இ-3)

## உலக அரங்கில்

## அல்ஜீரியாவில் 17 இளைஞர் தீவிரவாதிகளால் கொலை

பாரிஸ் ஒக 22
அல்ஜீரியாவில் இடம்பெற்ற வெவ்வேறு சம்பவங்களில் முஸ்லீம் கெரில்லாக்கள் 17 இளைஞர்களை வெட்டிக் கொலை செய்துள்ளனர்.

அல்ஜீரியாவில் இருந்து 300 மைல்கள் தெற்கேயுள்ள சிட்டிலாட்ஜால் என்ற கிராமத்தில் பிரயாணிகளுடன் சென்று கொண்டிருந்த பஸ் ஒன்றை 10 முஸ்லீம் கெரில்லாக்கள் தடுத்து நிறுத்தியதாகவும்-

பஸ்ஸில் இருந்த 17 வயதுக்கும் 25 வயதுக்கும் இடைப்பட்ட வயதினரை அருகில் உள்ள காட்டுக்குள் அழைத்துச் சென்று கழுத்தை வெட்டிக் கொலை செய்ததாகவும்- தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்கத்துக்கு எதிரான கெரில்லாக் குழுக்களில் சேர மறுக்கும் இளைஞர்களையே இவ்விதம் வழி மறித்தும், கடத்திச் சென்றும் கொலை செய்யும் சம்பவங்கள் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

## பொப்டோலுக்கு ஹொலின் போல் ஆதரவு

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தில் குடியரசுக் கட்சி வேட்பாளர் பொப்டோலுக்கு ஆதரவாக ஹொலின்போல் களத்தில் இறங்கியுள்ளார். 1990 இல் நடைபெற்ற வளைகுடா யுத்தத்தின் பின்னர் ஹொலின் போல் பிரசித்தி பெற்றிருந்தார்.

பொப்டோல் அதிபர் தேர்தலில் வெற்றி பெறும் பட்சத்தில் ஹொலின்போல் வெளியுறவுச் செயலாளராகப் பதவி ஏற்பார் என இப்போதே ஊகங்கள் தெரிவிக்கின்றன.

ஹொலின்போல் அமெரிக்க அரசியலில் பெரும் செல்வாக்குடைய அரசியல் வாதியெனக் கருதப் படுகிறது. (இ- 3)

## டாக்காவில் 20 பேர் காயம்

டாக்கா பல்கலைக் கழகத்தில் நேற்று முன்தினம் ஆளும் கட்சி — எதிர்க்கட்சி ஆதரவு மாணவர்களிடையே துப்பாக்கிப் பிரயோகம் இடம் பெற்றது.

இத்துப்பாக்கிப் பிரயோகத்தில் 20 பேர் காயமடைந்தனர். (இ- 3)

## சீனாவில் தூக்கு

சீனாவில் கடந்த ஜனவரி மாதம் மாடு மேய்ப்பதில் எழுந்த பிரச்சினை காரணமாக எண்மர் கொலை செய்யப்பட்டனர்.

இக்குற்றத்துக்காக ஒரே குடும்பத்தைச் சேர்ந்த எண்மர் நீதிமன்ற உத்தரவுப்படி தூக்கிலிடப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

போக்குவரத்து

## அமைச்சரின் கார் ஒருவரின் உயிரைப் பலியெடுத்தது!

### அதற்காகப் பதவி துறந்தார்

லண்டன், ஒக. 22
தான் பயணம் செய்த கார் ஒருவரது உயிரைப் பலி வாங்கிவிட்ட சம்பவத்துக்காக பிறேசில் நாட்டு போக்குவரத்து அமைச்சர் ஒடாசில்ரீன் தனது பதவியை ராஜினாமாச் செய்து கொண்டார்.

அமைச்சரும் அவரது 18 வயது மகனும் விருந்தொன்றில் கலந்து கொண்டு விட்டு வீடு திரும்பும் போது இந்த விபத்து ஏற்பட்டது.

சம்பவம் இடம் பெற்ற போது அமைச்சரும், அவரது மகனும் மது அருந்தி இருந்தனர் என்றும் —

அமைச்சரின் மகனே காரை ஓட்டி வந்ததாகவும் — தெரிவிக்கப்படுகிறது.

இந்த விபத்தில் 24 வயதுடைய கடற்றொழிலாளி ஒருவர் உயிரிழந்தார். (இ- 3)

## சேர்பியர்களின் ஆயுதங்களை அழிக்கும் பணியில் அமைதிப் படை

சரயேவோ, ஒக. 22
பொஸ்னியாவில் சேர்பியப் படைகள் சட்டவிரோதமாக ஒரு கிராமப் பாடசாலையில் களஞ்சியப் படுத்தி வைத்திருந்த சுமார் 300 தொன் நிறையுள்ள ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகளை நேட்டோ அமைப்பின் தலைமையில் செயற்படும் பொஸ்னிய அமைதிப் படைகள் அழிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளன.

ரவைகள், வெடிமருந்துகள், றொக்கட்டுகள், நிலக்கண்ணிகள் அடங்கிய சுமார் 6,000 பெட்டிகளை கைப்பற்ற பொஸ்னிய அமைதிப் படை அப் பாடசாலையை சுற்றி வளைத்து உட்புகுந்தது.

இந்த ஆயுதங்கள், வெடி மருந்துகள் ஆகியன நிலத்துக்கடியில் அழிக்கப்பட்டு வருவதாகவும் —

இப் பணி முடிவடைய பல நாள்கள் எடுக்கும் எனவும் — தெரிவிக்கப்படுகிறது.

தமக்கு எதிராக பொஸ்னிய அமைதிப் படை எடுக்கும் இந்த நடவடிக்கைக்கு எதிராக பொஸ்னிய சேர்பியர்கள் பதில் தாக்குதல்கள் எதையும் மேற்கொள்ளும் அறிகுறிகள் தென்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (இ-10)

# கறுப்பு ஜூலையை உருவாக்கி தமிழர்களைக் கொன்றவர் ஜே.ஆர்.

### சந்திரிகா கூறுகிறார்

கொழும்பு, ஒக. 22
1983 ஆம் ஆண்டு ஜே. ஆர் ஜெயவர்த்தனாதான் வன்செயலை உண்டுபண்ணி கறுப்பு ஜூலையை உருவாக்கினார். அதன் மூலம் உரிமைகள் கேட்ட தமிழ் மக்கள் கொல்லப்பட்டார்கள்.

இப்படி ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்க பதுளையில் நடந்த கூட்டம் ஒன்றில் கூறினார்.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாச புலிகளுக்கு ஆயுதங்கள் வழங்கினார்.

மரத்தில் படரும் கொடி என்று தமிழ் மக்களை முன்னாள் ஜனாதிபதி விஜேதுங்க நிந்தித்தார்.

இனப்பிரச்சினை என்று ஒன்று இல்லை என்று உலகை நம்பவைக்க விஜேதுங்க முயற்சித்தார்.

இத்தகைய நிலையில்தான் தமிழ் மக்கள் புறக்கணிக்கப்பட்டு அப்பாவித் தமிழ் மக்களும் புலிகளுக்கு ஆதரவு அளிக்கும் நிலை ஏற்பட்டது.

இதன் மூலம் வெளிநாட்டில் சிங்கள பக்களுக்கு எதிராக பிரசாரம் மேற்கொள்ளப்பட்டது.

இந்நிலையை நாம் மாற்றியமைத்துள்ளோம் —

இப்படி ஜனாதிபதி மேலும் கூறினார். (இ-3)

## பாடசாலை, கோயில்கள்; முகாம்களாகக் கூடாது

### தங்கத்துரை கோருகிறார்

கொழும்பு, ஒக. 22
''வடக்கு- கிழக்கில் பல பாடசாலைகள் இராணுவ முகாம்களாக மாறுகின்றன. பாடசாலைகள், மதவழிபாட்டு நிலையங்கள் இராணுவ முகாம்களாக மாற்றப்படுவது தவிர்க்கப்பட வேண்டும்''

திருகோணமலை மாவட்ட எம். பி. அ. தங்கத்துரை மேற்கண்டவாறு கேட்டுள்ளார்.

கடந்தவாரம் நாடாளுமன்றத்தில் பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

தேசியக்கல்விக் கொள்கை ஒன்றை வகுக்கும் போது அனைத்து சமூகங்களும் அதனை ஆராய்வதற்கு இடமளிக்க வேண்டும். ஆட்சி மாற்றங்களுக்கு அமைய கல்விக் கொள்கைகள் மாறக் கூடாது என்றும் அவர் கூறினார். (இ-3)

## மாஹோவில் மலத்தியோன்

யாழ்ப்பாணம் ஒக, 22.
மலத்தியோன், திரிபோஷா ஆகியவை சுகாதார சேவைகள் மாகாண பிரதிப்பணிப்பாளர் அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## கொழும்பில் மீண்டும் ட்ராம் வண்டி அறிமுகம்

கொழும்பு நகரில் மீண்டும் ட்ராம் வண்டிகளை அறிமுகப் படுத்துவது தொடர்பான சாதகநிலைகுறித்து அறிக்கை தயாரித்து முடிக்கப்பட்டுள்ளது என கொழும்பு மாநகர முதல்வர் கே. கணேசலிங்கம் தெரிவித்துள்ளார்.

கொழும்பு கோட்டை, புறக்கோட்டை, மருதானை, கொம்பனி வீதி ஆகிய பகுதிகளில் முதலில் ட்ராம் வண்டிகள் அறிமுகப்படுத்தப்படும் எனவும், இதற்கான நிதியை வழங்க கனேடிய அரசும், வேறு சில வெளிநாட்டு நிறுவனங்களும் முன்வந்துள்ளன எனவும் அவர் தெரிவித்தார்.

சுமார் 50 வருடங்களுக்கு முன்னர் கொழும்பு நகரில் ''ட்ராம்'' வண்டிகளே முக்கிய போக்குவரத்துச்சாதனங்களாக விளங்கின. (இ - 10)

## தபால்கள் கப்பல் மூலமே எடுத்துச் செல்லப்படுகின்றன

யாழ்ப்பாணம், ஒக. 22
யாழ். பிரதம தபாகலத்திலிருந்து வெளியூருக்கான தபால்கள் கப்பல் மூலமே கொழும்புக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன.

விமானம் மூலம் வாரத்திற்கு மூன்று தடவைகள் பாரமற்ற தபால்களை எடுத்துச் செல்ல முன்னர் ஏற்பாடாகி இருந்த போதிலும் சில சிரமங்கள் காரணமாக அது கைகூடவில்லை என்று தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

விமானத்தில் அனுப்பி வைப்பதற்காக எடுத்துச் செல்லப்பட்ட தபால்கள் இறுதியில் காங்கேசன்துறை துறைமுகத்திலிருந்து கப்பல் மூலமே அனுப்பி வைக்கப்பட்டது என்றும் அவர் கூறினார்.

இருந்த போதிலும்— வாரத்தில் ஒரு தடவையாவது தபால்கள் கப்பல் மூலம் எடுத்துச் செல்லப்படுவதாகவும் அவரால் தெரிவிக்கப்பட்டது.

இது இவ்வாறிருக்க விரைவாக தபால்களை வெளிநாட்டுக்கு அனுப்பி வைப்பதற்கான முயற்சிகளை தபால் திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர். (இ 5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தேவை

உப உணவுப் பொருள்கள் தயாரிப்பதற்கு Temperature Meter, Brik Meter உடன் தேவைப்படுகின்றன. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: டாக்டர் பத்மநாதன், பழங்கிணற்றடி பிள்ளையார் கோவிலடி, கலாசாலை வீதி, திருநெல்வேலி. (42278)

### விற்பனைக்கு

மீசாலை - புத்தூர் சந்திக்கு மிக அண்மையில் 3 பரப்புக் காணிக்குள் சிறிய வீடு, கிணறு மற்றும் வசதிகளுடன் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: மணியம் ஸ்ரோர்ஸ், கண்டி றோட், சாவகச்சேரி. (சி- 2784)

### தவறிவிட்டது

S. சேவியர் ஆகிய எனது இல. 39017128 X அடையாள அட்டை 18-08-96 அன்று ஸ்ரான்லி வீதியில், தவறிவிட்டது. அட்டையில் உள்ள முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும், (42347)

### வாங்கப்படும்

புராணக்கதை, நாவல் புத்தகங்கள், அம்புலிமாமா ஆகிய பழைய புத்தகங்கள் நியாயமான விலையில் வாங்கப் படும். பாலா ஸ்டோர்ஸ், சரசாலை றோட், மட்டுவில். (சி- 2785)

### வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்மா, வாதநோய்கள், மாதவிடாய்குத்து, வலிப்பு, சரும நோய்கள், மூல மூத்திர ரோகங்களில் பிரபல மானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வைத்திய கலாநிதி சி. இராசரத்தினம் 121, 2 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். [42111]

### தென்னம் நாற்றுக்கள்

உடன் நடுகைக்கு உகந்த தென்னம் நாற்றுக்கள் (பல இனங்கள்) விற்பனைக்கு உண்டு. வியாபாரிகளுக்கு விஷேட கழிவு உண்டு. மு. காங்கேசு, ஐயா கடையடி, கண்டிவீதி, மீசாலை (42285)

### பாலர் ஆசிரியராக

பாலர் ஆசிரியர் பயிற்சி தபால் வழியில் நடைபெறுகிறது. க.பொ.த. (சா.த.) கடைசித் தகைமையாகும். உடன் விண்ணப்பிக்குக. பாலர் ஆசிரியர் சங்கம், மே/பா. திரு. வீ. கே. கந்தசாமி, ''பழமுதிர்சோலை'', 20, அச்சக ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (42277)

### மீண்டும் ஆரம்பம்

குழந்தைகள், முதியவர்கள் அனைவருக்கும் சிறந்த சிகிச்சையளிக்கின்ற இல. 129, ஸ்ரேஷன் றோட் இரெட்ணம் வைத்தியசாலை யாழ்ப்பாணத்தில் தனது பழைய இடத்திலேயே சேவையைத் தொடர்கிறது என்பதை அறியத் தருகிறோம். (42236)

### கவரிடுதல்

அடையாள அட்டை, பாடசாலை அடையாள அட்டை, தேசிய அடையாள அட்டை உட்பட சகல அடையாள அட்டைகளையும் வேண்டிய அளவுகளில் கவரிட்டு பெற்றுக் கொள்ள நீங்கள் நாட வேண்டிய ஸ்தாபனம்: கிளீன் கட், யாழ்ப்பாணம். (42246)

# வெளிநாடு செல்ல கொழும்பு வந்த பருத்தித்துறை வாசி மீது சித்திரவதை

## நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனு

கொழும்பு, ஓக. 22

வெளிநாடு செல்வதற்காக கொழும்பு வந்த பருத்தித்துறையைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் கொழும்பு மகஸின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

தாம் பலத்த சித்திரவதைக்கு ஆளானதாக இரத்தினசிங்கம் இராமமூர்த்தி என்ற அந்தக் குடும்பஸ்தர் தாம் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுவில் உயர் நீதிமன்றத்தில் முறையிட்டுள்ளார்.

இந்த மனுவை ஏற்ற நீதியரசர்கள் அமரசிங்க, தீரரத்ன, ஆனந்தகுமாரசாமி ஆகியோர் இம்மனு மீதான விசாரணை எதிர்வரும் ஒக்ரோபர் 22 ஆம் திகதி நடைபெறும் என அறிவித்துள்ளனர்.

தாண்டிக்குளம் இராணுவ முகாம் பொறுப்பதிகாரி, வவுனியா இராணுவ முகாம் பொறுப்பதிகாரி, இராணுவ பொறுப்பதிகாரி, சி. டி. பி. இயக்குநர், பொலீஸ் மா அதிபர், மகஸின் சிறைச்சாலை அத்தியட்சகர், சட்ட மா அதிபர் ஆகியோரை பிரதிவாதிகளாக மனுதாரர் தமது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

தாம் சித்திரவதைக்குள்ளான விவரங்களை அவர் தமது மனுவில் விளக்கியுள்ளார். (இ-3)

## அதிபர் கூட்டம்

யாழ்ப்பாணம் ஓக. 22

சாவகச்சேரி கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த அதிபர்களின் கூட்டம் இன்று வியாழன் காலை 10.00 மணிக்கு கோட்டக் கல்வி அலுவலர் திரு. இ. கணேசன் தலைமையில் கோட்டக்கல்வி அலுவலகத்தில் நடைபெறும்.

இந்தக் கூட்டத்தில் யாழ். கல்வி வலயம் — 1 இன் கல்விப் பணிப்பாளரும் கலந்து கொள்வார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## அம்புலன்ஸ் இல்லை

வடமராட்சி, ஓக - 22

வல்வெட்டித்துறை மாவட்ட அரசினர் வைத்திய சாலையில் அம்புலன்ஸ் இன்மையால் அவசர நோயாளர்கள் பெரிதும் அவதியுறுகிறார்கள்.

அவசர நோயாளர்களை வேறு வைத்திய சாலைக்கு மாற்றவேண்டுமானால் நோயாளர்களின் உறவினர்கள் தனியாரின் கார்களை வாடகைக்கு அமர்த்த வேண்டியுள்ளது.

(இ - 173)


## முதலாவது பிறந்த தின வாழ்த்து

★ செல்வன் ச. அபிராம் ★

பன்னாலையைச் சேர்ந்த
சயந்தன் - சிவசக்தி தம்பதிகளின்
செல்வப் புதல்வன் அபிராம்

தனது முதலாவது பிறந்த தினத்தை 22-08-1996 இன்று கோண்டாவில் மேற்கு பாடசாலை வீதியில் உள்ள தனது இல்லத்தில் சிறப்பாகக் கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, அம்மப்பா மற்றும் சித்தி, பெரிய மாமா, சின்னமாமா, சித்தப்பா, பிரான்ஸ் சித்தப்பா ஆகியோர், எல்லாம் வல்ல இறை அருள் பெற்று சீரும், சிறப்புடனும் பல்லாண்டுகாலம் வாழ வாழ்த்துகின்றனர்.

சு. சயந்தன்
(ஆசிரியர்)

(42336)


## மேலதிக அரச அதிபராக தொடர்ந்தும் பதவி நீடிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 22

யாழ் மேலதிக அரச அதிபராகக் கடமையாற்றிய திரு. க. சண்முகநாதனின் இடமாற்றம் 6 மாதத்துக்கு பிற்போடப்பட்டுள்ளது.

யாழ். மேலதிக அரசாங்க அதிபர்களாகப் பணியாற்றி வந்த திரு. க. சண்முகநாதனும், திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போலும் கடந்த மாதம் 10 ஆம் திகதி கொழும்பு பொது நிர்வாக அமைச்சுக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்தனர்.

திரு. க. சண்முகநாதனின் இடமாற்றம் 6 மாதகாலத்துக்கு பிற்போடப்பட்டுள்ளதாக பொதுநிர்வாக அமைச்சு தெரிவித்ததை அடுத்து அவர் இன்னும் ஓரிரு தினங்களில் யாழ்ப்பாணம் திரும்பி பழைய பணியில் கடமையாற்றுவார் எனத் தெரிவிக்கப்பட்டது.

திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போலின் இடமாற்றம் குறித்து தகவல் ஏதும் தெரியவரவில்லை. (இ-3)

## பாடசாலை தனியாக இயங்கும்

அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரி தனித்துவமான பாடசாலையாக செயற்படும், இதற்கான அனுமதியை கல்வித்திணைக்களம் வழங்கியுள்ளது.

தற்பொழுது அச்சுவேலி மகா வித்தியாலயத்துடன் சேர்ந்து இணைப்புப் பாடசாலையாகவே அது இயங்கி வருகின்றது.

கோப்பாய்த் தொகுதியில் ஒரே ஒரு மகளிர் கல்லூரியான அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரியைத் தனித்துவமாக செயற்பட அனுமதிக்குமாறு பாடசாலை அபிவிருத்திச்சபை கோரியிருந்தது குறிப்பிடத்தக்கது. (இ-11)


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை பழைய மாணவர்
சங்க செயலாளர் வி. தயாபரனின் அன்புத் தந்தையார்

### கதிரவேலு விஜயசிங்கம்

அவர்களின் மரணச் செய்தி கேட்டு மிகவும் கவலையடைவதோடு, அன்னாரின் குடும்பத்தினருக்கும் எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், உப அதிபர்,
ஆசிரியர்கள், மாணவர்கள்.

யா / வண்ணை, நாவலர் ம. வி.
யாழ்ப்பாணம். (42352)


வரவு செலவுத்திட்டம்:

## சமுர்த்தி, உரம், கல்வியில் இம்முறை வெட்டு இல்லை

### அமைச்சர் பீரிஸ் கூறுகிறார்

கொழும்பு, ஓக. 22

நெருக்கடியான இக்கால கட்டத்தில் எதிர் வரும் நவம்பர் 6 ஆம் திகதி வரவு -செலவுத் திட்டத்தை சமர்பிக்க வேண்டியவனாக இருக்கிறேன். வரவு - செலவுத்திட்டத்தில் சமுர்த்தி, உரம், கல்வி போன்ற மானியங்களில் ஐந்து சதம் கூட வெட்டப்பட மாட்டாது''

நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் மேற்கண்டவாறு கூறினார்.

நாடு சுதந்திரம் அடைந்த பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட வரவு - செலவுத்திட்டங்களைப் போன்றது அல்ல இம்முறை சமர்ப்பிக்கப்பட உள்ள வரவு - செலவுத்திட்டம்.

இம் முறை மிக நெருக்கடியான காலகட்டத்தில் இதனைச் சமர்பிக்கவிருக்கிறேன்.

இந்த வருடம் யுத்த செலவுக்கு 3 ஆயிரத்து 800 கோடி ரூபா ஒதுக்கப்பட்டது. இருந்தாலும் மேலதிகமாக ஆயிரம் கோடி ரூபா இன்று வரை செலவிடப்பட்டு விட்டது.

எவர் என்ன கூறினாலும் மானியங்கள் வெட்டப்பட மாட்டா.

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-3)


## நியூட்டன் கல்வி நிலையம்

82, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(ஆரியகுளம் சந்திக்கு அருகில்)

### கணக்கியல் வகுப்புகள்

**A/L 97**

கம்பனிக் கணக்குகள்

ஆரம்பம்: **24 – 08 – 96** 2-15 மணி
(சனிக்கிழமை)

குறிப்பு:

★ புதிய மாணவர் கற்காத பாடங்கள் முழுமையாக கற்பிக்கப்படுவதுடன், சகல பாடங்களும் மீட்டல் செய்யப்படும்.

★ குறைந்தது 20 வருட கடந்தகால வினாவிடைகள் கற்பிக்கப்படுவதுடன், புதிய பாடத்திட்டத்திற்கமைவான மாதிரி வினா விடைகள் ஆராயப்படும்.


ஆசிரியர்: திரு. S. D. J. சுதர்ஷன்


(ஆசிரியர் யாழ் நகரில் தற்போது எமது நிறுவனத்தில் மட்டும் கற்பித்து வருவது குறிப்பிடத்தக்கது)

ஏனைய கலை, வர்த்தக வகுப்புகளும், விளையாட்டு உத்தியோகத்தருக்கான போட்டிப் பரீட்சை ஆயத்த வகுப்பும், அடிப்படை சிங்கள வகுப்புகளும் நடைபெறுகின்றன.

(மேலதிக விவரங்கள் அலுவலகத்தில்)

(42349) நிர்வாகி





## லாவண்யா

பல் மூக்குக் கண்ணாடி அகம்

செவ்வாய், வியாழன், சனி
காலை 8-30 மணிமுதல் பகல் 12-30 மணிவரை

யாழ். வீதி, நெல்லியடி.
(மகாத்மா தியேட்டர் அருகாமை)

சிறந்த முறையில் பல் கட்டுபவர், கண் பரிசோதித்து கண்ணாடி கொடுப்பவர். இன்றே நாடுங்கள்:

Dr. றெஜிசொலமன்

நெல்லியடி, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/2733)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## மறுபரிசீலனை தேவை

தமிழ் மற்றும் சிறுபான்மை மக்களின் நியாய பூர்வமான உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் மட்டுமே சமாதானத்தை ஏற்படுத்தலாம் என அரசு ஆழ்ந்த நம்பிக்கை கொண்டுள்ளது—

இனப்பிரச்சினைக்கு போரினால் மட்டுமே தீர்வு காண்பது என்ற அணுகுமுறையில் அரசுக்கு நம்பிக்கை இல்லை. இராணுவ வெற்றிகளை அரசியல் தீர்வின் மூலமே நிலை நிறுத்த முடியும் என்பதாலேயே, போர் நடந்து கொண்டிருக்கும் போதே அரசு பல அரசியல் முயற்சிகளை மேற்கொள்கிறது.—

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசின் இரண்டாவது ஆண்டுப் பூர்த்தியை ஒட்டி வெளியிட்ட விசேட செய்தியில் ஜனாதிபதி சந்திரிகா இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

சமாதானத்தை நிலை நாட்ட வேண்டுமெனில் இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்பதனை எல்லோரும் ஒப்புக் கொள்கிறார்கள்.

ஆனால் இனப்பிரச்சினையை, வெறும் வாய்ச் சொல்லில் இல்லாமல், நடைமுறைச் சாத்தியமான வகையில் எவ்வாறு தீர்ப்பது என்பதில் தான் பல தரப்புகளிலும் வெவ்வேறு முரண்பட்ட கருத்துக்கள் நிலவுகின்றன.

அதனையும் விட மேலாக, இனப்பிரச்சினைக்கான தீர்வு எத்தகையதாக அமைய வேண்டும் என்பதில் மாறுபட்ட கருத்துக்கள் குவிந்து குழம்பிப் போயுள்ளன.

சிறுபான்மையினர் தமது நியாயமான உரிமைகளைக் கேட்டால் அதற்கு வகுப்புவாதம், இனவெறி என்று சிலர் அர்த்தம் செய்கிறார்கள்.

சிறுபான்மையினர் உரிமைகளைக் கேட்பது உரிமைப் போராட்டம்; பெரும்பான்மையினர் தமது உரிமைகளைக் கேட்டால் அது இனவாதமா என்ற வாதத்தை முன்வைப்பவர்களும் உளர்.

இத்தகைய ஒரு சிக்கலான, கருத்து முரண்பாடும் குழப்பமும் இருக்கும்போது இனப்பிரச்சினைக்கான நியாயமான, நீதியான தீர்வு ஒன்றைக் காண்பது வனாந்தரத்தில் தண்ணீர் தேடுவது போலவே ஆகும்.

அத்தகைய ஒரு சூழ்நிலையில் போரினூடு சமாதானத்தை அடைவது என்ற அணுகுமுறை வெற்றி தருமா என்பது பெரும் சந்தேகத்துக்கு உரியதே. போரில் கிடைக்கும் வெற்றிகளை அரசியல் தீர்வின் மூலம் நிலை நிறுத்துவது என்ற கோட்பாடும் நிரந்தர வெற்றி அளிக்கக் கூடியது அல்ல. அது நீதியுடனான சமாதானத்தை மட்டுமன்றி, நிரந்தர சமாதானத்தையும் கொண்டு வர மாட்டாது.

எனவே போரினூடு சமாதானம் என்ற அணுகுமுறையை அரசு கைவிட்டு, அரசியல் வழியில் சமாதானம் என்ற நிலையைக் கைக்கொள்வது குறித்தும் மறுபரிசீலனை செய்ய வேண்டும்

அவ்வாறு செய்வதன் மூலம் — போரின் தாக்கத்தைத் தமிழர்கள் மட்டுமன்றி சிங்கள மக்களும் அனுபவ ரீதியாக உணர்ந்துள்ள இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துவதன் மூலம் — அரசியல் வழியினூடு சமாதானம் என்ற நிலைப்பாட்டுக்கு மாறுவதன் மூலம் — பெரும்பான்மையினரையும், சிறுபான்மையினரையும் நியாயமான தீர்வு தேவை என்ற நிலைக்கு இட்டுச் செல்லலாம்.

# கல்விக் கலாசாரத்தைக் காக்க சகல தரப்பும் ஒன்றுபட வேண்டும்

## பதில் துணைவேந்தர் அறைகூவல்

வலி தெற்கு, ஓக. 22

யாழ்ப்பாணத்தில் உள்ள பல கல்லூரிகள் முன்னர் கல்வியில் முன்னணி வகித்தன. அவை இன்று பின் தங்கிப் போவது கவலைக்குரியது.

யாழ்ப்பாணக் கல்விக் கலாசாரம் வீழ்ச்சி அடைந்து போகாமல் பாதுகாப்பதில் கல்விசார் அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், பொது மக்கள் ஆகிய நான்கு தரப்பினருக்கும் பெரும் பொறுப்பு உண்டு. அந்த நான்கு தரப்பினரும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும்.

ஸ்கந்தவரோதயாக் கல்லூரி முன்னாள் அதிபர் அமரர் வி. சிவசுப்பிரமணியத்தின் நினைவுக் கூட்டத்தில் பிரதம உரையாளராகக் கலந்து கொண்ட யாழ். பல்கலைக் கழகப் பதில் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை இவ்வாறு கூறினார்.

முன்னதாக —

வற்றாக்கை அம்மன் ஆலயத்தில் இருந்து அமரரின் உருவப்படம் மங்கள வாத்தியத்துடன் கல்லூரிக்கு எடுத்து வரப்பட்டது.

கல்லூரியில் அமைந்துள்ள திறந்த வெளியரங்கிற்கு அமரரின் ஞாபகார்த்தமாக சூட்டப்பட்ட பெயர்ப்பலகை பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளையினால் திரை நீக்கம் செய்யப்பட்டது.

கல்லூரி அதிபர் ஆ, கமலநாதன் தலைமையில் கடந்த திங்கட்கிழமை இந்த நிகழ்வு இடம்பெற்றது.

பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தமது உரையில் மேலும் கூறியதாவது:

பலஆசிரியர்கள், அதிபர்கள், கல்விமான்கள் மற்றும் பொது மக்களின் பங்களிப்புகளால் தான் எமது கல்விப் பாரம்பரியம் வளர்க்கப்பட்டு தொடர்ந்து பேணப்பட்டு வருகிறது.

### யாழ்ப்பாண கல்விப் பாரம்பரியம்

ஆறுமுகநாவலர் காலந்தொட்டு யாழ்ப்பாணக் கல்விப் பாரம்பரியத்தை நாம் வளர்த்து வந்துள்ளோம்.

யாழ்ப்பாண மக்கள் உணவுக்கு அடுத்ததாக முக்கியத்துவம் கொடுப்பது கல்விக்குத்தான்.

1950 — 60 களில் யாழ்ப்பாணத்தில் பல கல்லூரிகள் அறிவை வளர்ப்பதிலும், எமது கலாசார பாரம்பரியங்களைப் பேணுவதிலும் அக்கறை காட்டி உயர் நிலையில் விளங்கின.

1970 க்குப் பின்னர் பல பிரபல்யம் வாய்ந்த கல்லூரிகள் படிப்படியாக தமது செயற்பாடுகளை இழந்து வந்துள்ளன.

இதற்கு பலகாரணங்கள் கூறப்பட்டாலும், சைவப் பெரியார்கள், கல்விமான்களால் 1940 களில் உருவாக்கப்பட்ட பல கல்லூரிகள் முன்னர் கல்வியில் முன்னணியில் இருந்து இன்று பின் தங்கிப் போவது கவலைக்குரியதே.

### கல்விச் சரிவு

யாழ்ப்பாண கல்விச் சரிவுக்கு பலகாரணங்கள் கூறப்படலாம்.

1946 ஆம் ஆண்டளவில் தென் இலங்கையில் உள்ள காலி மாவட்டத்தினதும் யாழ்ப்பாண மாவட்டத்தினதும் குடிசனத் தொகை 4 லட்சத்து 50 ஆயிரமாக இருந்தது.

ஆனால் இன்று - காலி மாவட்டத்தில் 12 இலட்சமாக அதிகரிக்க யாழ். மாவட்டத்தில் 4 இலட்சத்து 50 ஆயிரத்துக்கும் குறைவாகவே குடிசனம் காணப்படுகிறது.

ஒப்பீட்டளவில் பார்க்கும் போது மீதி எட்டு இலட்சம் மக்களும் குடா நாட்டை விட்டு வெளியேறி இருக்க வேண்டும். இவர்கள் வன்னியிலும், வேறுமாவட்டங்களிலும், வெளிநாடுகளிலும் கூட குடியேறி இருக்கலாம்.

இந்நிலை காரணமாக யாழ்ப்பாண பாடசாலைகள் பல பிரச்சினைகளை எதிர் நோக்க வேண்டி உள்ளன.

எப்படி இருப்பினும் யாழ்ப்பாணக் கல்விக் கலாசாரம் வீழ்ச்சியடைந்து விடாது பார்த்துக் கொள்ள வேண்டும் அதனைப் பாதுகாப்பதில் கல்விசார் அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், பொது மக்கள் ஆகிய நான்கு தரப்பினருக்கும் பெரும் பொறுப்பு உண்டு. அதற்காக அவர்கள் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும்.

அமரர் சிவசுப்பிரமணியம் போன்ற பெரியோர்களால் வளர்க்கப்பட்டு பேணப்பட்ட கல்விப்பாரம்பரியத்தை அவர்களை நினைவு கூருவதன் மூலம் பலப்படுத்த வேண்டும்- இப்படி அவர் கூறினார்.

### தேசிய உடையில்

திரு. சி. சிவசரவணபவன் (சிற்பி) உரையாற்றுகையில்—

மகாத்மா காந்தி ஊட்டிய தேசிய பற்றில் பற்றுவைத்து அவரால் கவரப்பட்ட யாழ்ப்பாணத்துக் கல்விமான்களில் 99 சதவீதமானவர்கள் அன்று தேசிய உடையை அணிவதில் ஆர்வம் காட்டினர். அமரர் சிவசுப்பிரமணியமும் தேசிய உடையணிந்து ஒறேற்றர் சுப்பிரமணியத்துடன் இணைந்து கல்வி வளர்ச்சிக்காகப் பாடுபட்டார் எனக் கூறினார்.

உடுவில் பிரதேச செயலர் திரு. ஆ, மகாலிங்கம் பேசுகையில் — தனது வாழ்க்கையின் 75 சதவீத காலத்தை கல்வி வாழ்க்கையுடன் இணைத்துக் கொண்டு எந்தப் பிரதிபலனையும் எதிர்பாராமல் கடமையாற்றியவர் அமரர் சிவசுப்பிரமணியம் என்றார்.

பேராசிரியர் வீ. கே. கணேசலிங்கம் தமது உரையில் — மறைந்த கல்விமான்களுக்கு நினைவு நூல்களை வெளியிடுவதுடன் நிறுத்திக் கொள்ளாமல் வருடந் தோறும் ஞாபகார்த்த விழாக்களை நடத்த வேண்டும் — என்றார்.

திருவாளர்கள் சு. இரத்தினராசா, பீ. விக்கினேஸ்வரன், அ. தற்பரானந்தன், எஸ். சிவராசா, க. புவனேந்திரநாதன் உட்பட பலர் உரையாற்றினர்.

(அ-152)

## வைத்திய அதிகாரி இல்லை

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் மாவட்ட வைத்திய அதிகாரி (டீ.எம்.ஓ) இல்லாததால் இந்த வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்களில் பலர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குச் செல்லவேண்டியுள்ளது.

இந்த வைத்தியசாலையின் மாவட்ட வைத்திய அதிகாரி கொழும்புக்குச் சென்றுள்ளார்.

பதிவு வைத்திய அதிகாரிகளே நோயாளர்களுக்குச் சிகிச்சை அளிக்கின்றனர்.

அத்துடன் இந்த வைத்தியசாலைக்கு கொண்டு வரப்படும் சடலங்கள் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்படுகின்றன. (இ-117)

## என்முனே ஒருதரம் வருக!

நினைந்துனைத் தொழுது நித்தமும் உந்தன்
நினைப்புறு மணியொலி கேட்டு(ப்)
புனைந்திடு பாடற் பொருளினில் உந்தன்
புகழினை அருளினைப் பொதித்து,
நனைந்திடக் கண்ணீர் நாத்தழும் பேற
நாளெல்லாம் இசைக்கிறேன் கந்தா!
இணைந்திரு மாதர் எழில்வேல் மயிலொடு
என்முனே ஒருதரம் வருக!

— முருகனடியான்

நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

## ஆசிரியர் ஓய்வூதியக் கொடுப்பனவு

ஆசிரியர் சமூகமும் கல்வியுடன்தொடர்புடைய அனைவரும் ஆசிரியர்களின் புதிய சம்பளத்திட்டத்தை முழுமனதாக வரவேற்றனர். ஆசிரியர்களின் நீண்ட கால கோரிக்கைகளின் பின் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஒரு நியாயமான திட்டம் என்பது பலரது அபிப்பிராயமாகும்.

இத்தகைய அதிகரிப்பினால் இளைப்பாறிய ஆசிரியர்கள் பலனடையாவிடின் அஃது ஒரு வருத்தத்திற்குரிய விடயமாகும். ஓய்வூதியக் கொடுப்பனவுகளில் பெரும் வேறுபாடுகள் தோன்ற இடமுண்டு. உதாரணமாக 30 வருடம் சேவையாற்றிய ஒரு பயிற்றப்பட்ட ஆசிரியர் 06-10-94 (சம்பளத் திட்டம் அமுலுக்கு வந்த திகதி)க்கு முன் இளைப்பாறின் தனது அடிப்படை ஓய்வூதியமாக 3960 ரூபாவின் 90 சதவீதம் பெற உரித்துடையவராவார்.

இதே தராதரமும் சேவை மூப்புமுடைய இன்னோர் ஆசிரியர் 06-10-94 அன்றோ அல்லது அதன் பின்னரோ இளைப்பாறின் தனது அடிப்படை ஓய்வூதியமாக 8450 ரூபாவின் 90 சதவீதம் பெறத் தகுதியுடையவராவார். இக்கணிப்பின்படி 06-10-94க்குப் பின் இளைப்பாறுபவர் மாதாந்தம் 4000 ரூபாவுக்கு மேற்பட்ட தொகையை ஓய்வூதியமாக முன்னையவரிலும் பார்க்கக் கூடுதலாகப் பெற முடியும்.

இது மிகவும் துலாம்பரமான ஏற்றுக்கொள்ள முடியாத முரண்பாடாகும் இந்தப் பெரும் வேறுபாட்டினைத் தொடர்ந்து பேணல் எவ்வகையிலும் நியாயப்படுத்த முடியாததொன்றாகும்.

திருமுகம்

அரசாங்க ஊழியர்களின் வேதனம் காலத்திற்குக்காலம் அதிகரிக்கப்படுவதன் பிரதான காரணிகள் எவை? பணவீக்கத்தினாலும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பினாலுமே இவ்வாறு சம்பள உயர்ச்சி வழங்கப்படுகின்றது.

அரசாங்க ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்படும்பொழுது விகிதாசாரத்திற்கேற்ப ஓய்வூதியர்களின் கொடுப்பனவும் அதிகரிக்கப்படல் உலக நாடுகள் பலவற்றிலுமுள்ள நடைமுறையாகும்.

ஆசிரியர்களின் தரம் சடுதியாக ஓர் அதி உன்னத நிலையை அடைந்துள்ளது எனக் கொள்ளல் பொருத்தமற்றது. ஆசிரியர்கள் தம் கடும் உழைப்பினாலும் நீண்ட கால சேவையாலும் இத்தகைய ஓர் உயர்ச்சியான சம்பளத் திட்டத்தினைப் பெற்றுள்ளனர் என்றே கொள்ள வேண்டும்.

தமது பயன்தரும் நீண்டகால சேவையினால் கல்வியை மேம்படுத்திய இளைப்பாறிய ஆசிரியர்கள் எத்தகைய அதிகரிப்புமின்றி தொடர்ந்தும் ஒரே தொகையான ஓய்வூதியத்தைப் பெறுவது எவ்வகையிலும் நியாயமாகாது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள், இவ்வுணர்வுபூர்வமான விடயத்தினை நன்கு பரிசீலித்து நீதி வழங்குவர் என இளைப்பாறிய ஆசிரியர்கள் அனைவரும் அதிக அக்கறையுடன் எதிர்பார்க்கின்றனர்.

பொ. ச. ஞானசீலன்
சாவகச்சேரி.

## சீனியும் பருப்பும் எங்கே?

தங்கள் 18-08-96திகதிய உதயன் இதழில் திரு. க.க. துரைசிங்கம் எழுதிய ''உ'' அட்டைக்காரர்கள் பாதிக்கப்படவில்லையா என்ற மடலைப் படித்தேன். அதில் குறிப்பிடப்பட்டிருந்ததை விட ''உ'' அட்டை உடையவர்களுக்கு மேலும் பல பாதிப்புகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

1. தென்மராட்சி, வடமராட்சிப் பகுதிகளுக்குச் சென்று, இங்கு சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியாமல் காலதாமதமாக வந்த ''உ'' அட்டை உரியவர்களுக்கு முதல் தடவை வழங்கப்பட்ட இலவச நிவாரணம் வழங்கப்படவில்லை. ஆனால் அவர்களுக்கு ஒரு மாதம் பிந்தி வந்த ''இ'' அட்டை உரியவர்களுக்கு சகல முத்திரைகளும் கொடுக்கப்பட்டன.

2. ''உ'' அட்டைக்கு உலர் உணவுப் பொருள்கள் காசுக்கு வழங்கப்படும் எனக் கூறப்பட்டது. ஆனால் கிடைப்பது ஒருவருக்கு 2 கிலோ மாவும், 7½ கிலோ அரிசியும்தான். சீனி, பருப்பு, பால்மா இல்லையாம்.

ஆனால் கூட்டுறவுக் கடைகளில் சீனி, பருப்பு, பால்மா கூடிய விலைக்கு தாராளமாக விற்கப்படுகின்றன. இந்தச் சீனியும் பால்மாவும் எங்கிருந்து வருகின்றன? இவ்விடயம் எங்கள் அரசாங்க அதிகாரிகளுக்குத் தெரியாதா?

இது சம்பந்தமாக உரியவர்களுக்குப் பல கடிதங்கள் எழுதியும் ஆக்கபூர்வமான பதில் இன்னும் கிடைக்கவில்லை.

சே. இராசவல்லவன்
சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி சந்திரிகாவுக்கு ஜான்ஸிராணி விருது

## இந்திய காங்கிரஸ் வழங்கியது

கொழும்பு, ஓக. 22

ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்கவுக்கு ''ஜான்ஸிராணி'' விருது வழங்கப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளுக்கு எதிராகப் போராட்டம் நடத்தி வருவதை கௌரவிக்கும்வகையில் அவருக்கு இந்திய தேசிய காங்கிரஸ் இளைஞர் பிரிவு இதனை வழங்கியுள்ளது.

ஜான்ஸியின் ராணியான லட்சுமி பாயின் பெயர் இந்த விருதுக்குச் சூட்டப்பட்டிருக்கிறது.

பிரிட்டிஷ்காரருக்கு எதிராக மத்திய இந்தியாவில் 1857 ஆம் ஆண்டில் நடந்த கிளர்ச்சிக்கு ஜான்ஸிராணி தலைமைவகித்தார்.

இந்திய இளைஞர் காங்கிரஸ் தலைவர் மஹிந்தர்சிங் பேத்தா புதுடில்லியில் நடந்த முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி நினைவு நிகழ்ச்சியில் இந்த விருது பற்றி அறிவித்தார். (இ-3)

## சமாதான நீதிவான்கள் பற்றாக்குறை

வடமராட்சி, ஓக. 22

யாழ்ப்பாணக் குடாநாட்டில் சமாதான நீதிவான்களுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

இதனால் முக்கிய தேவைகளுக்கு சத்தியக்கடதாசி முடிக்க முடியாத நிலைபொது மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

முன்னர் சமாதான நீதிவான்கள் எம். பீக்களின் சிபார்சுடன் நியமிக்கப்பட்டனர்.

1990 இல் யுத்தம் ஆரம்பித்தது முதல் இங்கிருந்த பல சமாதான நீதிவான்கள் இடம்பெயர்ந்து குடாநாட்டுக்கு வெளியேயும், வெளிநாடுகளுக்கும் சென்றதும் —

யாழ். மாவட்டத்தில் சமாதான நீதிவான்கள் நியமனங்கள் நடைபெறாததுமே — பற்றாக்குறைக்குக் காரணமாகும்.

இங்குள்ள ஒருசிலசமாதான நீதிவான்களைத் தேடித் தூர இடங்களுக்கு மக்கள் அலைந்து திரிகின்றனர். (இ- 173)

## காணவில்லை

தும்பளை, நெல்லண்டை, பருத்தித்துறையைச் சேர்ந்த

**கோணேஸ்வரக் குருக்கள்**

(ரமணஐயர்) அவர்களை **08-08-96** முதல் காணவில்லை. வயது 26. இவர் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் தயவு செய்து அறியத் தரவும்.

வே. தியானந்தராசா-குருக்கள்
நெல்லண்டை,
பருத்தித்துறை.
(42354)

## சமய சந்நிதிகளில்

தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஸ்ரீ முருகன் ஆலய பூங்காவனத் திருவிழா நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு விசேட அபிஷேகம் பூசை ஆராதனை வழிபாட்டை அடுத்து நடைபெறும். (அ- 30)

★ ★ ★

மிருசுவில் செற்பெலி பரமசிவன் ஆலய அலங்கார உற்சவம் இம் மாதம் 13 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. இன்றுடன் உற்சவம் பூர்த்தியாகிறது. (அ-117)

★ ★ ★

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலய வருடாந்த உற்சவ சப்பறத் திருவிழா நாளை வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு விசேட அபிஷேகம், பூசை, ஆராதனை வழிபாடுகளை அடுத்து நடைபெறும். (அ- 30)

★ ★ ★

தொண்டமானாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி முருகன் ஆலய வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு —

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை நடத்தும் தெய்வீகக்கலை நிகழ்ச்சிகள் தொடரில் —

இன்று வியாழக்கிழமை 'கந்தனின் கருணைத்தூது' என்னும் பொருளில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி ஆசிரியர் ஆறு திருமுகன் சொற்பொழிவாற்றுவார்.

# மரண அறிவித்தல்

## சுப்பிரமணியம் சண்முகம்

(நிலஅளவைத் திணைக்கள ஊழியர்)

கொக்குவிலை பிறப்பிடமாகவும், கந்தரோடையை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சண்முகம் 20-08-96 அன்று காலமானார்.

அன்னார் பாக்கியத்தின் அன்புக் கணவரும், நாகேஸ்வரி, ஜெகமலர் [ஜேர்மனி], சத்தியகுமார், (கனடா), ரவிக்குமார் (யாழ். பல்கலைக்கழகம்), ஜெயகௌரி, ஜெகதீஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், கனகசபாபதி [நல்லூர் ப. நோ. கூ. சங்கம்] ஞானேஸ்வரன் [ஜேர்மனி], புவனேஸ்வரி (கனடா), யோகாதேவி, தர்மரட்ணம் (சவூதி) ஆகியோரின் அன்பு மாமனாரும், இராசையா, பூமணி, சுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற மரக் கூட்டுத்தாபன ஊழியர்), காலஞ்சென்றவர்களாகிய சாமிநாதன். சின்னம்மா, பொன்னம்மா, இரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று 21-08-96 இல் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவுசெய்து ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ரவிக்குமார்
(மகன்- யாழ். பல்கலைக்கழகம்)

'புனித இல்லம்'
சுன்னாகம் மேற்கு,
சுன்னாகம்.
(42356)

ஈழத்தமிழ்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கூறுகின்றது.

ஆனால் மறுபுறத்தில் —

இலங்கைத் தமிழ் அகதிகள் தமிழகத்துக்குள் நுழைவதற்கு மீனவர்கள் உதவியளித்தால் அல்லது அகதிகளை ஏற்றி வந்தால் அவர்களின் படகுகள் பறிமுதலாகும் என அதிகாரிகள் மீனவர்களை எச்சரித்துள்ளனர்.

மீனவர்கள் அகதிகளை ஏற்றிவருவதைத் தடைசெய்வதன் மூலம் அகதிகள் வருகையைத் தடை செய்யலாம் என தமிழக அரசு கருதுவதாகத் தெரிகின்றது.

அகதிகள் இலங்கையிலிருந்து தமது சொந்தப்படகுகளில் அல்லது அங்குள்ள வேறு வாடகைப் படகுகளில் தமிழக கரையோரப் பகுதிகளுக்குள் நுழைந்தால் அத்தகைய படகுகளைக் கைப்பற்றுவதன் மூலம் தொடர்ந்து இலங்கையிலிருந்து அகதிகள் வருவதற்கு தேவையான படகுகளை இலங்கையின் வடக்கு—கிழக்குப் பகுதிகளில் இல்லாமற் செய்யலாம் என்று தமிழக அதிகாரிகள் கருதுவது போலவும் தெரிகிறது.

இலங்கைத் தமிழ் அகதிகளை ஏற்றி வரும் தமிழக மீனவர்களுக்கு எதிராக தமிழக அதிகாரிகள் காட்டிவரும் கெடுபிடி குறித்தும்—

அதனை ஆட்சேபித்தும் இராமேஸ்வரம் பகுதியில் சுமார் இருபத்தையாயிரம் மீனவர்கள் ஐந்து நாள் வேலைநிறுத்தப் போராட்டம் ஒன்றை நடத்தி வருவது பற்றியும்—

ஏற்கனவே செய்திகள் வெளியாகியிருந்தன என்பது தெரிந்ததே. (உ-5)

அ.தி.மு.க..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அக்கூட்டத்தில் கட்சியின் புதிய பொதுச் செயலாளராக முத்துச்சாமி தெரிவு செய்யப்பட்டார்.

கண்ணப்பனும், கே. கே. எஸ். எஸ். இராமச்சந்திரனும் இணைதுணை பொதுச் செயலாளர்களாகத் தெரிவாகினர்.

சட்டத்தரணி விஜயன் தாக்கப்பட்ட வழக்கில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் இருக்கும் முன்னாள் அமைச்சர் எஸ். டி. சோமசுந்தரம் கட்சியின் அரசியல் குழுத் தலைவராகத் தெரிவானார்.

கட்சியின் பொதுக்குழு உறுப்பினர்களில் எழுபது வீதமானோர் இக் கூட்டத்துக்கு வருகை தந்ததாக முத்துச்சாமி அறிவித்தார்.

ஆனால் கட்சியில் தமக்குள்ள செல்வாக்கையும் ஆதரவையும் வெளிக்காட்டுவதற்காக கட்சியின் பொதுக்குழுவைத் தாமே மீண்டும் கூட்டி தமது வலுவை நிரூபிக்க ஜெயலலிதா முயற்சிக்கக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அப்போது தான் பிரிவுபட்டு நிற்கும் இரு அணிகளில் உண்மையான அ. தி. மு. க. எது என்பது தெரிய வரும் என்று அவதானிகள் கருத்து வெளியிட்டனர்.

1970 களின் முற்பகுதியில் அ. தி. மு. கவை எம். ஜி. ஆர். ஆரம்பித்த பின்னர் கட்சி பிளவுபடுவது இது நான்காவது தடவையாகும்.

1983 இல் எம் ஜி ஆர் உயிருடன் இருந்தபோதே கட்சியைப் பிளந்து நமது கழகம் என்ற பெயரில் புதியகட்சியை எஸ். டி. சோமசுந்தரம் ஆரம்பித்தார்.

1987 இல் எம். ஜி. ஆர். மறைவுக்குப்பின் ஜெயலலிதா அணி ஜானகி அணி என கட்சி இரண்டுபட்டது.

1990 இல் அ தி. மு. கவிலிருந்து பிரிந்து எம். ஜி. ஆர். அ. தி. மு. க.என்ற கட்சியை [illegible] (உ-5)

# நரசிம்மராவின் மனு மீது இன்று நீதிமன்று தீர்ப்பு

இந்தியாவின் முன்னாள் பிரதமர் நரசிம்மராவ் ஊழல் வழக்கு ஒன்றில் தாக்கல் செய்த மனு மீதான தீர்ப்பு இன்று வியாழக் கிழமை இந்திய உச்ச நீதிமன்றத்தில் வழங்கப்பட இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய உச்ச நீதிமன்றம் இந்த மனு மீதான விசாரணையை நேற்று முடித்துக் கொண்டது.

கீழ் நீதிமன்றம் விடுத்த அழைப்பாணைக்கு எதிராக நரசிம்மராவ் இந்த மனுவை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார்.

இன்றைய உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு நரசிம்மராவுக்கு ஓரளவு சாதகமாக அமையலாம் என்றும்—

வேறு ஒரு குற்றவியல் நீதிமன்றத்தில் அவர் புதிதாக மனுச் செய்ய அனுமதிக்கப்படலாம் என்றும் — பி.பி.ஸி: நேற்றுத் தெரிவித்தது. (இ)

### 15 வயதுக்குட்பட்டோர்

# உலகக் கிரிக்கெட் போட்டி இந்தியா சாம்பியனானது

வண்டன், ஓக. 22

லண்டனில் நடைபெற்ற — பத்து நாடுகள் கலந்து கொண்ட — 15 வயதுக்குட்பட்டோருக்கான — உலகக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் பாகிஸ்தானைத் தோற்கடித்து இந்தியா சாம்பியனானது.

இப்போட்டியில் 7 விக்கெட் இழப்புக்கு 223 ஓட்டங்களைப் பாகிஸ்தான் பெற்றது. பதிலளித்து ஆடிய இந்தியா வெற்றி பெறுவதற்கு ஆறு ஓட்டங்களைப் பெற இருக்கையில் சுமார் ஐநூறு பேரைக் கொண்ட பாகிஸ்தான் ஆதரவாளர் குழு ஒன்று மைதானத்தில் இறங்கியதாகவும்—

அதனைத் தொடர்ந்து இந்திய ரசிகர்களும் மைதானத்திற்குள் இறங்கவே ஆட்டம் இடை நிறுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து வெற்றி இந்தியாவுக்கு வழங்கப்பட்டது.

இதற்கிடையில் —

அரையிறுதிப் போட்டிக்குள் நுழையாத அணிகளுக்கிடையே இடம்பெற்ற சுற்றுப் போட்டிகளில் ஸ்ரீலங்கா அணி மேற்கிந்திய அணியை 47 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்று சாம்பியனாகியது.

ஓட்ட விவரம்:- ஸ்ரீலங்கா அணி 148 ஓட்டங்கள். மேற்கிந்திய அணி அனைத்து விக்கட்டுகளையும் இழந்து 101 ஓட்டங்கள். (உ-10)

யாழ். கிளிநொச்சி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பாடு செய்துள்ளோம் யாழ்ப்பாணத்துக்கு அழைத்துச் செல்வதற்கு முன்பாக வவுனியாவில் தங்கவைக்க ஏற்பாடு செய்துள்ளோம். அங்கிருந்து பின்னர் யாழ். குடாநாட்டுக்கு உங்களை அனுப்பிவைக்க உத்தேசித்துள்ளோம்.

வவுனியாவில் தங்க சகல வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. வவுனியாவுக்கு வருமாறு அரசு உங்களை அன்போடு அழைக்கிறது.

''உண்ண உணவும், இருக்க இடமும் இன்றி இருக்காமல் வவுனியாவுக்கு வாருங்கள்.

''கிளிநொச்சி மக்களையும் வவுனியாவுக்கு வருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

''யாழ். குடாநாட்டில் எவ்வாறு அமைதியான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுத்தோமோ அதே போன்ற ஒரு சூழ்நிலையை கிளிநொச்சியிலும் உங்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்பதுதான் எமது விருப்பமும் நோக்கமுமாகும்.

'கிளிநொச்சி பிரதேசத்தை விடுவித்து, உங்கள் சொந்த இடங்களில் — அமைதியான சூழ்நிலையில்— மகிழ்ச்சியாக — பாதுகாப்போடு — வாழக்கூடிய நிலையை உங்களுக்கு உருவாக்கிக் கொடுப்பதற்காகவே உங்களைத் தற்காலிகமாக வவுனியாவுக்கு வந்து சேருமாறு நாங்கள் விநயத்துடன் கேட்டுக்கொள்கின்றோம்.''

— இவ்வாறு அந்த அறிவிப்பில் அரசு தெரிவித்துள்ளது. (உ-3)

# தமிழ்க்கட்சிகள் ஐ. தே. க. சந்திப்பு இல்லை

தமிழ் அரசியல் கட்சித் தலைவர்களுக்கும் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் நேற்றுகொழும்பில் நடைபெற இருந்த சந்திப்பு ரத்துச் செய்யப்பட்டது.

வசதி அற்ற நிலைமை காரணமாகவே இந்தச் சந்திப்பு ரத்துச் செய்யப்பட்டதாக ஐ. தே. க. அறிவித்திருப்பதாகத் தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் பி. பி. ஸிக்குத் தெரிவித்தார்.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அரசாங்கம் அதிகாரப் பரவலாக்கல் யோசனையை வெளியிட்டுள்ளது. நாங்கள் அதில் சில திருத்தங்களைக் கொண்டு வந்துள்ளோம். என்றும் அவர் கூறினார்.

போதிய..,

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சாலைகள்தான் தற்போது இடம் பெயர்ந்த மக்களின் வைத்திய தேவைகளைக் கவனிக்கக் கூடியதாக உள்ளன. ஆனால் அவற்றிலும் மருந்து வகைகள் இல்லை.

எனினும் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளுக்கு இன்னும் மருந்து வகைகள் அனுப்பப்படவில்லை.

### மழையால் அவதி

வன்னியிலும் கோடை மழை பெய்கிறது.அதனாலும் இடம் பெயர்ந்த மக்கள் பெரும் அவலமுறுகின்றனர்,

இருப்பிட வசதி இல்லாத காரணத்தால் இடம் பெயர்ந்தோரில் பலரும் மர நிழல்களையே கூரைகளாகக் கொண்டு நாள்களைப்போக்குகிறார்கள்.

இந்த வேளையில் மழை பெய்வதால் பலரும் நனைந்து அதன் காரணமாகவும் நோய்களுக்கு ஆளாகிறார்கள்.

### உணவு நிலைமை

இம்மாதம் 12 ஆம் திகதி தொடக்கம் நேற்று வரை சுமார்250 லொறிகளில் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளுக்கு உணவுப் பொருள்கள் எடுத்துச்செல்லப்பட்டுள்ளன. அதனால் உணவுத் தட்டுப்பாடு ஓரளவு நீங்கியதாக அறிவிக்கப்படுகிறது.

இதே வேளை—

வவுனியாவுக்கு வடக்கே இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளுக்கு கூடுதல் உணவு லொறிகளை அனுப்ப அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

நாளொன்றுக்கு 50 லொறிகள் என்ற வீதம் உணவுப் பொருள்கள் வவுனியாவுக்கு வடக்கேயுள்ள வன்னிப் பிரதேசங்களுக்கு அனுப்பி வைக்கப்படும் என்று அரச அதிகாரி ஒருவர் கொழும்பில் தெரிவித்திருக்கிறார். (அ-5 3)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அவர்களதுபணிமனையில் 22-08-1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org